6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

1. அண்ணா மாவட்டம், நத்தம் தாலுக்காவிலுள்ள பட்டய குளம் மற்றும் இலுப்பப்பட்டி, ஆகிய கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 24—11—1987ஆம் நாளிட்ட 924 எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பூதான இயக்கச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

2. 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 19—11—1990 ஆம் நாளிட்ட 992ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

3. 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 17—12—1990 ஆம் நாளிட்ட 2492ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1905 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டம் (தமிழ்நாடு சட்டம் 3/1905) 8(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

4. தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது குடியிருப்புகள் (அனுமதியின்றி குடியிருப்போரை அகற்றுதல்) சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 14—2—1991 ஆம் நாளிட்ட 1446/பி2/91-1-ன் அரசு கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1975ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது குடியிருப்புகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

5. தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 24—10—1990 ஆம் நாளிட்ட 445 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

6. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின்

25—11—1990ஆம் நாளிட்ட 53 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

7. இராமநாதபுரம் அங்காடி குழுவின் அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 5—3—1990ஆம் நாளிட்ட 179ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

1. 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS